This question paper contains 2 printed pages]

*Your Roll No.* ..........................

**4406**

**B.A. (PROGRAMME)/I G-I**

TAMIL LANGUAGE (B) (A-179)

(Skills of Language use and Modern Prose Text)

*Time : 3 Hours* *Maximum Marks* : 100

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

1. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2x20= 40

அ. 'வேட்கை' சிறுகதையின் உள்ளடக்கம் குறித்து விளக்குக.

ஆ. 'பள்ளத்தெரு' சிறுகதை வெளிப்படுத்தும் சமூக அவலத்தை ஆராய்க.

இ. 'இலைகள் சிரித்தன' சிறுகதையின் கதைக்கருவை ஆராய்க.

ஈ. 'மாயக்கிளிகள்' சிறுகதை உணர்த்தும் தத்துவத்தை விவரிக்க.

2. பலபொருள் ஒருசொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விவரிக்க. 10

(அல்லது)

ஒருபொருள் குறித்த பல சொற்கள் மொழியில் பெறும் இடத்தினைச் சான்றுகளுடன் விளக்குக.

3. பிழை திருத்தி எழுதுக: 10

அ. புரநாநூறு

ஆ. அகனானூரு

இ. பதிட்டுப்பத்து

ஈ. பறிபாடள்

உ. நத்திணை

4. கீழ்வரும் பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குத் தக்கவிடை தருக: 20

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களைச் சங்க இலக்கியம், சமய இலக்கியம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம், புதுமைத் தமிழிலக்கியம் என்று பல வகையாகப் பாகுபாடு செய்யலாம். சங்க

P.T.O.

இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புடையனவாகப் போற்றப்படுவன நீதி இலக்கியமும் சமய இலக்கியமும் ஆகும். சங்க காலத்திற்குப் பின்னர் நீதி நூல்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. இந்நீதி நூல்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முடிமணியாகவும் திருக்குறள் விளங்குகிறது. சமய மலர்ச்சிக் காலத்திற்கு முன்னரும் பின்னரும் இயற்றப்பட்டுள்ள நீதி நூல்களெல்லாம் திருக்குறளை அடியொற்றி எழுதப்பட்டனவாகும்.

அ. தமிழ்மொழி இலக்கியங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

ஆ. சங்க இலக்கியத்திற்கு அடுத்ததாகப் போற்றப்படும் இலக்கியங்கள் எவை?

இ. திருக்குறள் எவற்றுக்கு முன்னோடியாக விளங்குகிறது?

ஈ. திருக்குறளை அடியொற்றி எழுதப்பட்ட நூற்கள் எக்காலத்தவை?

உ. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி, இதன் மையக்கருத்தைச் சுருக்கித் தருக.

20

5. ஏதேனும் ஒரு தலைப்பில் சிறு கட்டுரை வரைக:

அ. பண மதிப்பிழப்பு

ஆ. சுகாதார இந்தியா

இ. தமிழக கேரள நதிநீர்ப் பிரச்சினை

100